**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**

**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**

**மோ.வா.வி.கோ.மனு எண். 210 /2018**

பெயர் - திரு.ஸ்டீபன் எ.ம.சா.1

த/பெ -

கிராமம் -

தாலுகா -

தொழில் -

ஜாதி -

மதம் -

வயது -

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 02-ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை :-**

நான் பணகுடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கபெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கும்படி காவல் ஆய்வாளருக்கு அறிவிப்பு அனுப்பட்டிருந்தது. அதன் தொடர்பாக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எனக்கு அங்கீகார கடிதம் கொடுத்துள்ளார் அது **சா.சா.ஆ.1.**

சுஜாதா மதன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் எங்கள் காவல்நிலைய குற்ற எண்.344/2018 வழக்கு பதிவு செய்து அதன் படி சம்பவம் 06.06.2018 மதியம் 12 மணியளவில் நடந்தது. இந்த விபத்து சம்பந்தமாக மருத்துவமனையில் இருந்து ஏதேனும் தகவல் கிடைத்ததா என்றால் இல்லை. சாட்சி பின்னிட்டு மனுவேல் மருத்துவமனையில் இருந்து 30.06.2018 ம் தேதி விபத்து சம்பந்தமாக தகவல் கிடைத்துள்ளது என்கிறார். குற்ற எண்.344/2018 ன் **முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ.2.** 344/2018 வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி கிடையாது திரு.ஆன்டோ

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2024.02.02 18:55:40 +0530

பிரதீப் புலன் விசாரணை அதிகாரி தற்போது அவர் எங்கு வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. குற்ற எண்.344/2018 வழக்கு சம்பந்தப்பட்ட **மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர்** உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது **சா.சா.ஆ.3 மற்றும் சா.சா.ஆ.4.** குற்ற வழக்கு விசாரணைக்கு பிறகு 10.08.2018 அன்று 279, 337, 338 இதச ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு சுருக்கு வழக்கு எண்.1291/2018 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு 08.12.2018 ம் தேதி எதிரி குற்றத்தை ஒப்புக்கெண்டு ரூ.2,000/- அபராதம் செலுத்தியுள்ளார் குற்ற வழக்கு முடிக்கப்பட்டுவிட்டது. 30.06.2018 ம் தேதி புகார் கொடுத்த போது விபத்து வாகனம் பற்றி தெரியவில்லை என்பதால் வாகனம் பற்றி தெரிந்து கொண்டு புகார் கொடுக்க 24 நாட்கள் காலதாமதம் என சொல்லியுள்ளார். 01.07.2018 ம் தேதி எதிரி கைது செய்யப்பட்டார். அந்த வாகனத்தை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு அனுப்பியுள்ளாரா என்றால் அனுப்பபட்டுள்ளது. 02.07.2018 ம் தேதி அனுப்பட்டுள்ளது. புகார்தாரர் சொன்ன தகவலின் பேரில் வாகனத்தின் உரிமையாளரை வரவழைத்து விசாரித்து வாகனத்தை கைப்பற்றினார் அது சம்பந்தமாக தனிப்பட்ட வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது வழக்கு கோப்பில் இல்லை. விபத்து வாகனத்தை எந்த தேதியில் கைப்பற்றினார்கள் என ஆவணத்தில் துலங்கவில்லை. விபத்துக்கு மறுநாள் இரண்டு வாகனங்களும் ஆய்வுக்குக்காக அனுப்பட்டது. விபத்து வாகனம் கட்டாயப்படுத்தி கைப்பற்றப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது நான் புலன் விசாரணை அதிகாரி கிடையாது. **மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை 2 எண்ணிக்கை உண்மை நகல் சா.சா.ஆ.5.**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

இந்த குற்ற வழக்கின் புலன் விசாரணை அதிகாரி புகார்தாரர் சுஜாதா மதன் மற்றும் எல்டின், ரூபா ஆகிய மூவரையும் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகளாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் அந்த விபரம் குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியின் இருசக்கர வாகனத்தில் பிரண்டு வைசர் உடைந்திருந்ததாக ஆய்வறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தார் சென்ற வாகனத்தில் முன்வலது பக்கம் சேதம் ஆனதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். குற்ற வழக்கு சம்பந்தமாக யுனைடெட் இந்தியா கம்பெனியில் இருந்து புகார்

A BARSAD BEGUM
Digitally signed by A BARSAD BEGUM
Date: 2024.02.02 18:55:47 +0530

கொடுக்கப்பட்டது சம்பந்தமகா வழக்கு கோப்பில் ஏதேனும் துலங்குமா என்றால் இல்லை. ஆவணங்கள் அடிப்படையிலும், புலன் விசாரணை அதிகாரி விசாரணை அடிப்படையிலும் இந்த விபத்துக்கு அரவிந்த ஜெகன் என்பவர் தான் முழுக்க முழுக்க காரணம் எனறால் சரிதான்.

**மறுவிசாரணை** - இல்லை

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2024.02.02 18:55:54 +0530